# PAFFREL

නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරීත්වය.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.

PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS

2022-10-11

## මැතිවරණ සිතියම හැකිලීමට රජය දරණ උත්සාහයට ඉඩ නොතබමු

ජනතාව තවදුරටත් සොඳුරු වදන්වලින් මුලාකිරීම හෙළාදකිමු.

ගරු ජනාධිපති රනිල් වික්‍රමසිංහ මැතිතුමන් මැතිවරණ ක්‍රමය සංශෝධනය පිළිබඳව අවස්ථා කිහිපයකදී අදහස් දක්වා තිබූ අතර අවසන් වරට පෙරේදා (09) දිනයේදී වෘත්තියවේදීන් සමග පැවති සාකච්ඡාවේදී දැක්වූ අදහස් මගින් ගම්‍ය වන්නේ ජනතාවට පැණි තවරා විෂ ගිල්ලවීමට ජනාධිපතිතුමා දරණ උත්සාහයයි. නොඑසේනම් සමාජය තුළ මැතිවරණ ක්‍රමය පිළිබඳ හා දේශපාලනඥයන් පිළිබඳව ඇති අප්‍රසාදය භාවිත කරමින් ජනතාවට පාලකයන් පිළිබඳව සිය කැමැත්ත හෝ අකැමැත්ත ප්‍රකාශ කිරීමට ඇති අයිතිය අහිමි කරමින් මැතිවරණ සිතියම හකුලුවාලීමට දරණ කූඨ උත්සාහයක්  බවයි. ඒ සඳහා දැනට යෝජනාවී ඇති සාධනීය මැතිවරණ සංශෝධන කිහිපයක් එකතු කරගනිමින් ජනතා විරෝධය ඇතිවීම වැළැක්වීමට උත්සාහ දැරීමක් බවයි.

ඉතිහාසය පුරාවටම ගෙන එන ලද මෙවැනි සංශෝධන හරහා උත්සාහ කර ඇත්තේ ඒ මොහොතේ සිටින පාලකයාට අවැසි ලෙස මැතිවරණ ක්‍රම සංශෝධනය කිරීම විනා රටක් ලෙස සලකා රටේ ආර්ථික, සමාජ, දේශපාලන සංදර්භයට ගැලපෙන ක්‍රමවේද හඳුන්වාදීමට නොවේ. එමෙන්ම එම සංශෝධන හරහා තම පක්ෂයට වාසිදායක මොහොතක් එන තෙක් මැතිවරණ කල්දමාගැනීමට පාලකයා කටයුතු කර තිබේ. ඒ හරහා  සාධනීය යෝජනාවක් හෝ පිළිගැනීමට නොහැකිවන ආකාරයට වත්මන් ජනාධිපතිතුමා ඇතුලු පැවති ආණ්ඩු ජනතා විශ්වාසය පලුදු කර තිබේ. ඊට අදාල උදාහරණ කිහිපයක් පෙන්වාදිය හැකිය.

1. 2012 අංක 12 දරණ පළාත් පාලන මැතිවරණ සංශෝධන පනතට අදාල සීමානිර්ණය නිසිකලට අවසන් කිරීමට ක්‍රියානොකිරීම හරහා මැතිවරණය කල්දමනු ලැබීය. පැෆ්රල් සංවිධානය ගනු ලැබූ අධිකරණ ක්‍රියාමාර්ග මගින් සීමානිර්ණය අවසන් කරන්නට බලකරනු ලැබූ අතර මැතිවරණය ලබාගත හැකිවූයේ වසර දෙකකින් අනතුරුවය.

2. වත්මන් ජනාධිපතිතුමා අග්‍රාමාත්‍ය ධූරය දැරූ යහපාලන රජය කාලය තුළ (2017 වර්ෂයේදී) 20 වන ව්‍යවස්ථා සංශෝධනය ගෙනඑමින් සහ ඊට ඉතා සාධනීය කරුණු කිහිපයක් ඇතුළත් කරමින් ඒ හරහා මැතිවරණය කල්දැමීමට උත්සාහ දැරූ අතර පැෆ්රල් සංවිධානය හා තවත් කිහිපදෙනෙකු අධිකරණය ඉදිරියේ කරුණු දැක්වීම හේතුකොටගෙන එකී උත්සාහය ව්‍යර්ථ විය.

3. එහෙත් යහපාලන රජය විසින් 2018 වර්ෂයේ නැවත වරක් පළාත් සභා ක්‍රමයට කාන්තා නියෝජනය ඇතුළත් කිරීම සඳහා ඉතා සාධනීය යෝජනාවක් ඉදිරිපත් කර අනතුරුව එය සම්පූර්ණ මැතිවරණ ක්‍රමයේ සංශෝධනයක් බවට පත්කර, මැතිවරණ ක්‍රමයම අතරමං කරනු ලැබීය. එහි ප්‍රතිඵලයක් ලෙසට මේ වන විට සියලු පළාත් සභා මහජන නියෝජිතයන්ගෙන් තොරව ජනාධිපතිතුමා සෘජු නියෝජතයින් හරහා පාලනය වේ. ඒ හරහා ජනතාවගේ ඡන්ද අයිතිය වසර 2 සිට වසර 4  දක්වා කාලයක සිට අහිමිකර තිබේ.

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.

Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572

Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

4. එමෙන්ම ජනාධිපතිතුමා අග්‍රාමාත්‍ය ධුරය දැරූ කාලය තුළ 22 වන සංශෝධනය සම්බන්ධයෙන් අවස්ථා ගණනාවකදී ජනතාවට ලබාදුන් පොරොන්දුව වූයේ 19 වන ව්‍යවස්ථා සංශෝධනයේ අන්තර්ගතය ඒ ආකාරයෙන්ම සම්මත කරන බවය. එහෙත් එකී පොරොන්දුව ඉටුකරලීමට ජනාධිපතිතුමන් මෙතෙක් අසමත්වී ඇත. මේ සියලු කාරණා හරහා ජනාධිපතිතුමාගේ මැතිවරණ සංශෝධන යෝජනා වල අවංකභාවය පිළිබඳව ජනතාවට කිසිදු විශ්වාසයක් ඇතැයි සිතිය නොහැක.

**එමෙන්ම ගරු ජනාධිපතිතුමන්ගෙන් හා රජයෙන් ඇසිය යුතු ප්‍රශ්න කිහිපයක් තිබේ.**

1. සියලු දේශපාලන පක්ෂ වල සහභාගීත්වය සහිතව වර්තමාන ගරු අග්‍රාමාත්‍යතුමන්ගේ සභාපතිත්වයෙන් යුක්තව ක්‍රියාත්මක වූ මැතිවරණ ක්‍රමය සංශෝධනය සඳහා පාර්ලිමේන්තු තේරීම් කාරක සභාව ඉදිරිපත් කල වාර්තාව රජය පිළිනොගන්නේද? එම තේරීම් කාරක සභාවට මැතිවරණ කොමිසම, සිවිල් සංවිධාන, පුරවැසියන්, දේශපාලන පක්ෂ ඇතුලු විශාල පිරිසක් සිය යෝජනා ඉදිරිපත් කර තිබූ අතර එම වාර්තාව වර්තමාන රජය නියෝජනය කරන පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුන් සියලු දෙනා අනුමත කර තිබේ. එවැනි කමිටුවක් හා වාර්තාවක් තිබියදී තවත් එවැනිම කමිටුවක් පත්කරන්නේ කවර හේතුවක් මතද?

2. මැතිවරණ වියදම් සීමාකිරීමට පනතක් ගෙනඒම ජනාධිපතිතුමාගේ ඉතා සාධනීය යෝජනාවකි. එහෙත් ජනාධිපතිතුමාට අවශ්‍ය නම් එම පනත දින කිහිපයක් තුළ පාර්ලිමේන්තුවට ගෙන ඒමට හැකියාව ඇත. ඊට අදාල කෙටුම්පත යහපාලන රජයේ කැබිනට් මණ්ඩලයත් හිටපු ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂ මහතාගේ රජයේ කැබිනට් මණ්ඩලයත් අවස්ථා දෙකකදී අනුමත කර ඇති අතර නීතිපති දෙපාර්තමේන්තුව එය කෙටුම්පත් කර අවශ්‍ය කටයුතු මේ වන විට සම්පූර්ණ කර ඇත. එබැවින් තවදුරටත් කල්මැරීමේ අවශ්‍යතාවයක් නොමැති අතර ජනාධිපතතුමාගේ අවංකභාවය ප්‍රදර්ශනය කිරීමට හා ජනතා විශ්වාසය ගොඩනගාගැනීමේ ආරම්භයක් ලෙස එය සම්මත කිරීමට වහා කටයුතු කල හැකිය.

3. පළාත් පාලන සභිකයන් ප්‍රමාණය වැඩිබව තේරුම්ගැනීමට පළාත් පාලන නිල කාලය වසර හතරක් අවසන්වී තවත් වසරක් කල්දමා එහිත් වලංගුභාවය අවසන් වන තෙක් කල්මැරීමෙන් පෙනීයන්නේ කුමක්ද? 8000 ක් වන සභික ප්‍රමාණය යම් ප්‍රමාණයකින් අඩුකිරීම කල යුතු බව අපද පිළිගන්නා නමුදු එම උත්සාහයේ සැබෑ අරමුණ කුමක්ද? ඒ සඳහා පක්ෂ අතර එකඟතාවයක් ලබාගෙන තිබේද? නැවත සීමානිර්ණයකට යාම හරහා අපේක්ෂා කරන්නේ දින නියමයකින් තොරව මැතිවරණ කල්දැමීම නොවන්නේද? රජය අවංක වන්නේ නම් සිදුකල යුත්තේ වහාම ජනතාවට තම මතය පලකිරීමට ඉඩලබාදී ඉන් අනතුරුව සංශෝධන වලට ප්‍රමාණවත් කාලයක් ලබාගැනීමයි.

4. එමෙන්ම පළාත් පාලන මැතිවරණ ක්‍රමයේ සභික ප්‍රමාණය 8000 සිට 4000 දක්වා අඩුකිරීමේදී කාන්තා නියෝජනයේ සියයට 25 සහ ජනාධිපතිවරයා නිරන්තරයෙන් සඳහන් කරන තරුණ නියෝජනය ශක්තිමත් කිරීමේ වැඩපිළිවෙල කවරේද?

5. ජනාධිපති ධුරයේ බලතල අඩුකිරීම පිළිබඳ දශක කිහිපයක සිට සාකච්ඡා කරමින් එහෙත් බලය ලැබුණු විට එය තවදුරටත් ශක්තිමත් කිරීමට කටයුතු කරන දේශපාලන සමාජයක, නියෝජනයේ පහළම ස්ථරය වන ප්‍රාදේශීය සභාපතිවරයාගේ බලය විමධ්‍යගත කිරීම ජනාධිපතිවරයා හදිසි අවශ්‍යතාවයක් ලෙස හඳුන්වන්නේ ඇයි? එසේ නම් එය ජනාධිපති ධුරයටද කිහිපගුණයක් අදාල නොවන්නේද?

6. දේශපාලන ක්‍රමය ප්‍රතික්ෂේප කරන බව හා මනාප ක්‍රමය දේශපාලන දූෂණයට හේතුවන බව ගරු ජනාධිපතිතුමා ප්‍රකාශ කලද ඔහු පවසන ආකාරයට මේ රටේ ජනතාවගේ ප්‍රධාන හා හදිසි ඉල්ලීම මැතිවරණ ක්‍රමයේ සංශෝධනයද? ජනතාව ඉල්ලා සිටින්නේ මහජන නියෝජිතයින් සිදුකරන හොරකම, වංචාව, අල්ලස, දූෂණය, රාජ්‍ය දේපළ අවභාවිතය හා මහජනයා සූරාකෑම, ජනතා මර්ධනය නවතන ලෙස නොවන්නේද? නීතියේ පාලනය, විනිවිදභාවය, කාර්යක්ෂම රාජ්‍ය පාලනය, ආර්ථික කළමණාකරණය, මූල්‍ය පාලනය, ජනතාවගේ ආර්ථික, සමාජයීය හා ජීවන මට්ටම උසස් තත්ත්වයකට ගෙනඒම නොවන්නේද? මැතිවරණ ක්‍රමය එහි එක් සාධකයක් පමණක් නොවන්නේද?

එවැනි පරිසරයක් තුළ මැතිවරණ ක්‍රමය සංශෝධනය සඳහා ජනතාව ඉදිරියට යන බව සඳහන් කරමින් ජනමත විචාරණයක් ලබාදීම මගින් සිදුකිරීමට උත්සාහ දරන්නේ රටත් ලෝකයත් මුලාකිරීමක් නොවන්නේද? එවැනි ජනමත විචාරණයක් මගින් ආණ්ඩුව කෙරෙහි ජනතාවගේ කැමැත්ත අකැමැත්ත ප්‍රකාශ නොවන අතර කිසිදු මහජන නියෝජිත ආයතනයකට කිසිදු බලපෑමක් ඇති නොකරයි.

මැතිවරණ ක්‍රමය සංශෝධනය කිරීමට රජය අවංකව උත්සාහ ගනු ලබන්නේ නම් හා ඒ සඳහා ජනමත විචාරණයක් පැවැත්විය යුතු යැයි ජනාධිපතිතුමා විශ්වාස කරන්නේ නම් ආසන්නයේම පැවැත්විය යුතු පළාත් පාලන මැතිවරණය සමගින් අතිරේක ඡන්ද පත්‍රිකාවක් එකතු කර ඊට අදාලව ජනතාවගේ මතය විමසීම බාධාවකින් තොරව සිදුකල හැකිය.

එමෙන්ම ජනාධිපතිතුමා යෝජනා කරන සෙසු සංශෝධන වන දේශපාලන පක්ෂ ලියාපදිංචිය හා ඊට අදාල නීති, මන්ත්‍රීවරුන්ගේ හැසිරීම හා සාරධර්ම පිළිබඳ නව නීති රීති, ජනමත විචාරණයකින් හෝ මැතිවරණ කල්දැමීමකින් තොරව ඉතා පහසුවෙන්ම සිදුකල හැකි බව අවධාරණය කරනු කැමැත්තෙමු. එබැවින් අප ගරු ජනාධිපතිතුමාගෙන් ඇතුලු රජයෙන් ඉල්ලා සිටින්නේ මැතිවරණ ක්‍රමයේ කඩිනම් සංශෝධන භාවිත කරමින් හා ජනමත විචාරණය භාවිත කරමින් ජනතාවගේ ඡන්ද අයිතිය පැහැර නොගන්නා ලෙසයි.

තවද මැතිවරණ කල්දැමීමකින් තොරව ජනාධිපතිතුමා ප්‍රමුඛ ආණ්ඩුව ගෙන එන සාධනීය මැතිවරණ ප්‍රතිසංස්කරණ සඳහා පැෆ්රල් සංවිධානයේ පූර්ණ සහාය ලබාදෙන බවද ඉතා අවධාරණයෙන් යුතුව සඳහන් කරමු.

රෝහණ හෙට්ටිආරච්චි

විධායක අධ්‍යක්ෂ

11/10/2022

# தேர்தல்களைக் காலம் கடத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இடமளிக்காதிருப்போம்
# மக்களைத் தொடர்ந்து இனிமைப் பேச்சுக்களால் ஏமாற்றுவதற்கு கண்டனம் தெரிவிப்போம்

கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தேர்தல் முமைறயில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் பற்றி பல சந்தரப்பங்களில் கருத்துத் தெரிவித்துள்ளதுடன், இறுதியாக நேற்று முன்தினம் (09) தொழிலதிபர்களுடன் இடம் பெற்றகலந்துரையாடலில் கூறிய விடயங்கள் பாணியைப்பூசி விசத்தை மக்களுக்குக் கொடுப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் முயற்சிக்கின்றமை தெளிவாகின்றது. அப்படியில்லாவிடின், சமூகத்தில் தேர்தல் முறைமை தொடர்பாகவும் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பாகவும் நிலவுகின்ற அதிருப்தியைப் பயன்படுத்தி மக்களுக்கு ஆட்சியாளர்களை தமது விருப்பு வெறுப்புக்களைத் தெரிவிப்பதற்குள்ள உரிமையை இல்லாது செய்துதேர்தல்களைக் காலம் கடத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி எனலாம். அதற்காக தற்போது முன்மொழியப்பட்டுள்ள சாதகமான தேர்தல் திருத்தங்கள் சிலவற்றை சேர்த்துக்கொண்டு மக்கள் மத்தயில் எதிர்ப்புக்கள் தோன்றுவதைத்தடுப்பதற்கு மேற்கொள்கின்ற முயற்சியாகும்.
கடந்தகாலங்களில் கொண்டு வரப்பட்ட இவ்வாறான திருத்தங்கள் மூலம், அவ்வப்போது ஆட்சி அதிகாரத்திலுள்ள ஆட்சியாளர்களுக்குத் தேவையான வகையில் தேர்தல் முறைமைகளைத் திருத்தம் செய்வதைத் தவிரநாட்டின் பொருளாதாரம், சமூக, அரசியல் சூழமைவுகளுக்குப் பொருத்தமானவகையில் அவற்றை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிக்கவில்லை. அத்துடன், குறித்ததிருத்தங்கள் மூலம் தமது கட்சிக்கு அனுகூலங்கள் கிட்டும் வரைக்கும் தேர்தல்களைக் காலம் கடத்துவதற்கும் ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன் மூலம் சாதகமான முன்மொழிவோ அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாத விதத்தில் சமகால ஜனாதிபதி உள்ளிட்ட கடந்தகால அரசாங்கங்கள் மக்களுடைய நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளனர். அதற்குசில உதாரணங்களை எடுத்துக் கூறலாம்.

1. 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை தேர்தல் திருத்தச் சட்டத்திற்குஏற்புடைய எல்லை நிர்ணயங்கள் உரிய காலத்தில் பூர்த்திசெய்வதற்கு செயற்படாதமையால தேர்தல் பிற்போடப்பட்டது.ப.ஃவ்ரல் அமைப்பு மேற்கொண்ட நீதிமன்ற நடவடிக்கை மூலம் எல்லைநிர்ணய நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதுடன், இரண்டு வருடங்களின் பின்னரே தேர்தலொன்றைப் பெறக் கூடியதாக இருந்தது.

1. சமகால ஜனாதிபதி அவர்கள் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் (2017 ஆம் ஆண்டில்) 20 ஆவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியும் மற்றும் அதற்கு மிகவும் சாதகமான விடயங்கள் சிலவற்றை உள்ளடக்கி அதன் மூலம் தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ப.்.வ்ரல் அமைப்பு மற்றும் ஏனைய சிலரும் நீதிமன்றத்தின் முன்னிலையில் விடயங்களைத் தெளிவுபடுத்தியமையின் பிரகாரம் அம்முயற்சி பலனளிக்கவில்லை.

2. ஆனாலும், நல்லாட்சி அரசாங்கத்தால் 2018 ஆம் ஆண்டில் மீண்டு மொரு முறை மாகாண சபை முறைமையில் பெண்களுடைய பிரதிநிதித்துவத்தை உள்வாங்குவதற்காக மிகவும் சாதகமான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டபின்னர் அதனை முழுமையான தேர்தல் முறைமை திருத்தமாக மாற்றி, தேர்தல் முறைமை இடைநிறுத்தப்பட்டது. அதன் விளைவாக தற்போது அனைத்து மாகாணசபைகளும் மக்கள் பிரதிநிதிகளின்றி ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதிகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இதன்மூலம் மக்களின் வாக்குரிமை 2 வருடங்கள் தொடக்கம் 4 வருடங்கள் வரைக்கும் இழக்கப்பட்டுள்ளது.

3. அத்துடன், ஜனாதிபதி அவர்கள் பிரதமர் பதவி வகித்த காலப்பகுதியில் 22 ஆவது திருத்தம் தொடர்பாக பலசந்தரப்பங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் காணப்படும் உள்ளடக்கங்களை அவ்வாறே நிறைவேற்றுவதாகக் கூறினார். ஆனாலும் குறித்தவாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அவர்களுக்கு இதுவரை இயலாமல் போயுள்ளது. இவ்வனைத்து விடயங்கள் மூலம் ஜனாதிபதி அவர்கள் தேர்தல் திருத்தத்திற்கான முன்மொழிவுகளில் காட்டும் நேர்மைத்தன்மை பற்றி மக்களுக்கு நம்பிக்கை உள்ளதென சிந்திக்க முடியாது.

**அத்தோடுகௌரவ ஜனாதிபதி மற்றும் அரசிடம் கேட்கப்படவேண்டியவினாக்கள் சிலஉண்டு.**

1. அனைத்துஅரசியல் கட்சிகளின் பங்கேற்புடன் சமகால கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில் இயங்கிய தேர்தல் முறைமை தொடர்பான திருத்தங்களுக்கான பாராளுமன்ற செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை அரசுஏற்றுக கொள்ளவில்லையா? அச்செயற்குழுவில் தேர்தல் ஆணைக்குழு, சிவில் அமைப்புக்கள், பிரசைகள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அதிகமானோர் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளதுடன், குறித்த அறிக்கைக்கு சமகால அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். அவ்வாறான குழு மற்றும் அறிக்கை காணப்படுகின்றபோது இன்னொரு அது போன்ற குழுவை நியமிப்பதற்கான காரணம் என்ன?

2. தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை அறிமுகப்படுத்தல் தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் சாதகமான கருத்தைத் தெரிவித்துள்ளார். ஆனாலும், ஜனாதிபதி அவர்களுக்கு தேவையிருப்பின குறித்தசட்டத்தை ஒரு சிலதினங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலுமை உண்டு. அதற்குரிய சட்ட மூலம் நல்லாட்சி அரசாங்க அமைச்சரவையும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் அமைச்சரவையும் இரண்டு சந்தர்ப்பங்களில் அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், சட்டமா அதிபர் திணைக்களம் சட்டமூலத்தைத் தயாரித்து அதற்குரிய நடவடிக்கைகள் தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அதனால் தொடர்ந்தும் காலங்கடத்துவதற்கான தேவை இல்லை யென்பதுடன், ஜனாதிபதிஅவர்கள் தனது நேர்மையை வெளிப்படுத்தவும் மற்றும் மக்களுடைய நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான முதற்கட்டமாக அதனை நிறைவேற்றுவதற்கு துரிதமாகச் செயற்படமுடியும்.

3. உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமென்பதைப் புரிந்துகொள்வதற்குநான்குவருடஉள்ளூராட்சிசபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துமேலும் ஒருவருடம் பிற்போடப்பட்டு அதன் பதவிக்காலம் முடியும் வரைக்கும் காலங்கடத்தியிருப்பதன் மூலம் தெரியவருவது என்ன? 8000 உறுப்பினர்களில் ஓரளவுக்கு எண்ணிக்கையைக் குறைக்கவேண்டு மென்பதை நாங்களும் ஏற்றுக்கொள்வதுடன், ஆயினும், குறித்தமுயற்சியின் உண்மையானநோக்கம் என்ன? அதற்காக கட்சிகளின் உடன்பாடு பெறப்பட்டுள்ளதா? மீண்டும் எல்லை நிர்ணயத்திற்கு செல்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது தேதிகுறிக்கப்படாமல் தேர்தலை காலங்கடத்துவது அல்லவா? அரசு நேர்மையாக செயற்படின் உடனடியாக மக்களுக்கு தமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்கு இடமளித்து பின்னர் திருத்தங்களுக்கு போதுமானளவு காலத்தைப் பெற்றுக்கொள்வதாகும்.

4. அத்துடன், உள்ளூராட்சி தேர்தல் முறைமை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8000 இலிருந்து 4000 ஆகக்குறைக்கும் போது பெண் உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தின் 25%வீத ஒதுக்கீடு மற்றும் ஜனாதிபதி அவர்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்துவரும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டம் எவ்வாறு அமையும்?

5. ஜனாதிபதி பதவியின் அதிகாரத்தைக் குறைத்தல் தொடர்பாக பலதசாப்தங்களாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. ஆனாலும் அதிகாரம் கிடைத்தவுடன் அதனை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசியல் சமூகத்தில், பிரதிநிதித்துவத்தின் அடிமட்டமான பிரதேசசபைத் தவிசாளரின் அதிகாரத்தை பன்முகப்படுத்துவது ஜனாதிபதி அவர்களின் அவசர தேவையாக இருப்பது ஏன்? இல்லாவிடின், ஜனாதிபதி பதவிக்கு அது பலமடங்கு ஏற்புடையதாக அமையாதா?

6. அரசியல் முறைமையை நிராகரிப்பதாக மற்றும் விருப்புவாக்கு முறைமை அரசியல் மோசடிக்குஏதுவாக அமைவதாக ஜனாதிபதி அவர்கள் கூறினாலும், அவர் கூறும் விதத்தில் எமது நாட்டு மக்களின் முக்கியமான அவசரமான கோரிக்கை தேர்தல் முறைமையில் திருத்தம் கொண்டுவருவதா? இங்கு மக்கள் வேண்டிநிற்பது மக்கள் பிரதிநிதிகளின் சூறையாடல்கள், மோசடிகள், இலஞ்சம், ஊழல், அரசசொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தல் மற்றும் மக்களைச் சுரண்டல், மக்களுக்கு எதிரான அடக்குமுறையை நிறுத்துமாறு அல்லவா? சட்டம் ஒழுங்கு, வெளிப்படைத்தன்மை, வினைத்திறனான அரசநிர்வாகம், பொருளாதாரமுகாமைத்துவம், நிதிக் கட்டுப்பாடு, மக்களின் பொருளாதார, சமூகமற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துலது அல்லவா? தேர்தல் முறைமைஅதில் ஒரு காரணிமாத்திரமேயாகும்?

அவ்வாறான சூழலில் தேர்தல் முறைமைத் திருத்தத்திற்காக மக்கள் முன்னோக்கிச் செல்வதாகக் கூறி மக்கள் தீர்ப்பொன்றை(Referendum) வழங்குவதன் மூலம் மேற்கொள்வதற்குமுயற்சிப்பது நாட்டையும் உலகத்தையும் ஏமாற்றும் செயல் அல்லவா? அவ்வாறானமக்கள் தீர்ப்பின் மூலம் அரசாங்கத்தின் மீதுள்ள மக்களின் விருப்பு வெறுப்பு வெளிப்படாததுடன், எந்த வொரு மக்கள் பிரதிநிதி நிறுவனத்திற்கும் யாதொருதாக்கத்தையும் ஏற்படுத்தாது.

தேர்தல் முறைமை திருத்தம் செய்வதற்கு அரசு நேர்மையான முயற்சி எடுப்பதாயின், மற்றும் அதற்காக மக்கள் தீர்ப்பொன்று நடாத்தப்பட வேண்டு மென ஜனாதிபதி அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தால், நெருங்கிவரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் மேலதிகவாக்குச் சீட்டொன்றை இணைத்து அதற்குரிய மக்கள் அபிப்பிராயத்தை தடைகளின்றி அறிந்து கொள்வதற்கு முடியும்.

அத்துடன், ஜனாதிபதி அவர்கள் முன்மொழியும் ஏனைய திருத்தங்களான அரசியல் கட்சிகளின் பதிவு மற்றும் அதற்கு ஏற்புடைய சட்டம், மக்கள் பிரதிநிதிகளின் நடத்தைகள் மற்றும் ஒழுக்க நெறிதொடர்பான புதிய சட்டம் ஒழுங்கு விதிகள், மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அல்லது தேர்தல்களை காலங்கடத்தாமல் மிகவும் இலகுவாக மேற்கொள்ள முடியுமென்பதை எடுத்துக்கூற விரும்புகின்றோம். ஆகவே எமது கௌரவ ஜனாதிபதி அவர்கள் உள்ளிட்ட அரசாங்கத்திடம் தேர்தல் முறைமையின் துரித திருத்தங்களைப் பயன்படுத்தி மற்றும் மக்கள் தீர்ப்பைப் பயன்படுத்தி மக்களின் வாக்குரிமையை புறக்கணிக்க வேண்டாமென வேண்டிநிற்கின்றோம்.

மேலும், தேர்தல்களைக் காலங்கடத்தாமல் ஜனாதிபதி அவர்களின் தலைமையிலான அரசாங்கம் அறிமுகப்படுத்துகின்ற சாதகமான தேர்தல் மறுசீரமைப்புக்களுக்கு பஃவ்ரல் அமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறுகின்றோம்.

றோஹன ஹெட்டியாராச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர்